**இனிமையான குழந்தைகளே! இப்பொழுது நீங்கள் சோழியிலிருந்து வைரம் போன்று ஆகியிருக்கிறீர்கள். ஈஸ்வரனின் மடியில் வருவது தான் வைரம் போன்று ஆவதாகும், ஸ்ரீமத் உங்களை வைரம் போன்று ஆக்கி விடுகிறது.**

கேள்வி: சத்யுகத்தில் சிலருக்கு இராஜ்ய சிம்மாசனம் மற்றும் சிலருக்கு வேலைக்காரன் அல்லது பிரஜைக்கான சிம்மாசனம் கிடைக்கிறது, இதற்குக் காரணம் என்ன?

பதில்: யார் சங்கமத்தில் ஞானக் கடலின் படிப்பை நன்றாகப் படித்து தாரணை செய் கிறார் களோ, ஞான ரத்தினங்களை தானம் செய்து பலரை தனக்குச் சமமாக ஆக்குகிறார் களோ அவர்கள் தான் சத்யுக இராஜ்ய சிம்மாசனத்தை அடைகின்றனர். மேலும் யார் தவறு செய்கிறார் களோ, தேக அபிமானத்தில் வந்து குழப்பத்தை உருவாக்குகிறார்களோ அவர்களுக்கு பிரஜை பதவி கிடைக்கிறது. படிப்பில் கவனம் கொடுக்காதவர்கள் வேலைக் காரர்களாக ஆகி விடு கின்றனர்.

ஓம் சாந்தி. சோழியிலிருந்து வைரம் போன்று ஆகக் கூடிய செல்லமான முயற்சியாளர் குழந்தைகள் மாயையின் புயல்கள் வருகின்றன என்பதை அறிந்திருக்கின்றனர். குழந்தைகள் சோழியிலிருந்து வைரமாவதற் கான முயற்சி செய்கின்றனர், ஆனால் ஸ்ரீமத்படி நடக்காத காரணத்தினால் மீண்டும் மாயையின் புயல்கள் வந்து விடுவதால் ஜோதி அணைந்து விடுகிறது. இதற்கான பாட்டும் இருக்கிறது. நாம் தான் பூஜ்ய தேவி தேவதைகளாக இருந்தோம் என்பதை குழந்தைகள் அறிவீர்கள். இதனை எல்லையற்ற மிக அன்பான தந்தையின் மூலம் ஆத்மா கேட்கிறது. அவருக்கு இந்த மகிமை பாடப்படுகிறது. அவர் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஆவார். முழு உலகமும் அவரைத் தான் நினைவு செய்கிறது. ஏனெனில் இந்த உலகில் துக்கமே துக்கம் தான் இருக்கிறது. அனைத்து மனிதர்களும் புத்தியற்றவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். பழமையான பாரதம் மிக உயர்ந்ததாக இருந்தது, மற்ற அனைத்து கண்டங்களும் அதாவது தர்மங்களும் இல்லாமல் இருந்தது என்று புரிந்து கொள்ளவும் செய்கின்றனர். அதனால் தான் பாரதம் பழமையானது என்று கூறுகின்றனர். இந்த அளவிற்குப் புரிந்து கொள் கின்றனர், ஆனால் அது எவ்வாறு ஆனது? எப்பொழுது ஆனது? பாரதம் மீண்டும் வைரம் போன்று எப்பொழுது மற்றும் எப்படி ஆகும்? என்பதை அறியவில்லை. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் எதிரில் அமர்ந்திருக்கிறீர்கள், மேலும் யார் தூரத்தில் அதாவது வெளியில் சென்டரில் இருக்கின்றார்களோ அவர்களும் கேட்கின்றனர். வைரம் போன்று ஆக்கக் கூடிய எல்லையற்ற தந்தை கூறு கின்றார் - இது உங்களது கடைசி ஈஸ்வரியப் பிறப்பாகும், இதில் பகவான் அமர்ந்து வைரம் போன்று ஆக்குவதற்காக உங்களுக்குக் கற்பிக்கின்றார். ஆக அப்படிப்பட்ட தந்தை யிடம் எவ்வளவு மரியாதை வைக்க வேண்டும்! சத்திய தந்தை, சத்திய ஆசிரியர், சத்குரு விற்கு மரியாதை செலுத்தப்பட வேண்டும். தந்தை கூறுகின்றார் - குழந்தைகளுக்கு சுகம் கொடுப்பவன் நான் மட்டுமே. இந்த நேரத்தில் குழந்தைகளாகிய உங்களுக்கு சுகம் கொடுப் பதற்காக வந்து எனது வழியைக் கூறுகின்றேன். பகவான் என்ன ஸ்ரீமத் கொடுத்திருந்தாரோ அதனை மனிதர்கள் கீதையில் எழுதி வைத்து விட்டனர். ஆனால் யதார்த்தம் கிடையாது. இப்பொழுது இவர் உங்களை உயர்ந்ததிலும் உயர்ந்த வைரம் போன்று

ஆக்குகின்றார். சொர்க்கத்திற்கு நீங்கள் தான் வர முடியும் அல்லவா! உலகில் உள்ள அனைத்து ஆத்மாக் களும் தந்தையின் குழந்தை கள் ஆவர். பிரஜாபிதா பிரம்மா இருக்கின்றார் அல்லவா! இந்த நேரத்தில் சிவபாபாவின் பேரன் பேத்திகள் என்று கூறப்படுகிறீர்கள். பிறகு கொள்ளுப் பேரன், எள்ளுப்பேரன் என்று கூறப்படு வீர்கள். விருத்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அல்லவா! உண்மையில் அனைவரையும் படைப்பவர் தந்தையாகிய நான் தான். உங்களைப் படைத்தது யார்? என்று கேட்கின்றனர் அல்லவா! அல்லா அல்லது குதா படைத்தார் என்று கூறுகின்றனர். இந்த அளவிற்குப் புரிந்து கொள்கின்றனர், ஆனால் எப்படிப் படைக் கின்றார்? இவ்வளவு பேர் எவ்வாறு விருத்தி அடைகின்றனர்? என்பது எதுவும் தெரியாது. சத்யுகத்தில் மிகக் குறைந்த படைப்புகள் தான் இருப்பர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவசியமாக படைப்பவரும் இருப்பார், அவர் தான் புது உலகைப் படைக் கின்றார். புது உலகில் தேவி தேவதா பதவியை பிராப்தியாக செய்விக்கின்றார் எனில், கண்டிப்பாக பழைய உலகை விநாசமும் செய்வித்திருப்பார், இதை யாரும் அறிய வில்லை. அளவற்ற சாஸ்திர புத்தகங்களை எழுதுகின்றனர். இது தத்துவ சாஸ்திரம் என்று நினைக் கின்றனர். தத்துவ ஞானம் என்றும் கூறுகின்றனர். ஆனால் ஞானக் கடல் ஒரே ஒரு பரம்பிதா பரமாத்மா என்பது யாருக்கும் தெரிய வில்லை. நீங்கள் இவர் மூலம் ஞானம் அடைந்து வைரம் போன்று ஆகின்றீர்கள். ஈஸ்வரனின் மடியில் வருவதே வைரம் போன்ற வாழ்க்கையாகும். வைரம் போன்று ஆக்கக் கூடிய தந்தை நம்மை வைரம் போன்று ஆக்கிக் கொண்டிருக்கின்றார். அவருக்குத் தான் புகழ் பாடப்படுகிறது. சத்யுகத்தில் புகழுக்கான விசயமே கிடையாது. அங்கு இந்த எண்ணமே இருக்காது.

நீங்கள் இப்பொழுது சூத்திரர்களும் கிடையாது, தேவதைகளும் கிடையாது என்பதை அறிவீர்கள். இப்பொழுது நாம் பிராமணர்களாக இருக்கிறோம். நீங்கள் சுவதரிசன சக்கரதாரி என்று கூறப்படு கிறீர்கள். இங்கு நீங்கள் சுவதரிசன சக்கரதாரிகளாக ஆகி விஷ்ணு குலத் திற்குச் சென்று இராஜ்யம் செய்வீர்கள். சுவதரிசன சக்கரதாரி, தாமரை மலருக்குச் சமமாக நீங்கள் இங்கு தான் ஆக வேண்டும். இங்கு முயற்சி, அங்கு பிராப்தியாகும். இப்படிப்பட்ட விசயங்களை உலகத்தினர் யாரும் அறியவில்லை. தந்தை கூறுகின்றார் - மாயை உங்களை கீழான புத்தியுடையவர்களாக ஆக்கி விட்டது. நீங்கள் வைரம் போன்று தேவி தேவதை களாக இருந்தீர்கள். முன்பு உங்களுக்குத் தெரியாமல் இருந்தது. உலகில் பல வழிகள் உள்ளன - சிலர் இவ்வாறு கூறு கின்றனர், மனிதன் இறந்து விட்டால் பிறகு புதிதாக பிறப்பார் என்று சிலர் கூறுகின்றனர். சங்கல்பம் எப்படியோ அப்படியே ஆகிவிடு கின்றன என்று சிலர் கூறுகின்றனர். பல வழிகளை உடைய மனிதர்கள் இருக்கின்றனர். நீங்கள் ஸ்ரீமத்படி நடக்கக் கூடியவர்கள். ஸ்ரீமத் மூலமாக உங்களது வழியும் சிரேஷ்ட மானதாக ஆகிறது. நீங்கள் மட்டுமே அறிவீர்கள், அனைவரும் அறிந்து கொள்ள மாட்டார் கள். இலட்சாதிபதியாக, கோடீஸ்வரனாக இருக்கலாம், ஆனால் இந்த ஞானத்திற்கு வருவது மிகவும் கடினமாகும். கோடியில் சிலர் தான் வருகின்றனர். ஏனெனில் செல்வந்தர்களில் பொய்யானவர்கள் பலர் உள்ளனர். நாடகத்தில் ஏழைகள் தான் ஈஸ்வரனின் மடியில் வர வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரதம் அவருடையது அல்லவா! பாப்தாதா இருவரும் சேர்ந்து இருக்கின்றனர் என்பதை நீங்கள் தான் புரிந்து கொள்கிறீர்கள். நிராகார பகவானுக்கு தனக்கென்று சரீரம் இல்லையெனில் அவசியம் கடனாக சரீரம் எடுக்க

வேண்டியிருக்கிறது. அப்பொழுது தான் பகவானின் மகாவாக்கியம் என்று கூறப் படும் அல்லவா! கிருஷ்ண பகவானின் மகாவாக்கியமாக இருக்க முடியாது. அவரை அனை வரும் உடனடியாக அறிந்து விடுவர். இவர் நிராகாராக இருக்கின்றார். அதனால் தான் இவரை யாரும் அறியவில்லை. இந்த நாட்களில் பல மனிதர்கள் வேடத்தை மாற்றி கிருஷ்ணரின் வேடத்தை தாரணை செய்கின்றனர், பணம் சம்பாதிக்கின்றனர். அனைவரும் மாயையின் மாணவர்களாக ஆகிவிட்டனர். இப்பொழுது நீங்கள் ஈஸ்வரனின் மாணவர்களாக ஆகியிருக் கிறீர்கள். சிலர் 100 சதவிகிதம் ஈஸ்வரனின் மாணவர்களாக ஆகியிருக்கின்றனர், அவரது சரணத்தில் வந்திருக்கின்றனர். மற்ற அனைவரும் மாயை இராவணனின் சரணத்தில் மாட்டி யிருக்கின்றனர். குறிப்பாக பாரதவாசிகள் அனைவரும் சோக வனத்தில் இருக்கின்றனர் என்று பாபா புரிய வைத்திருக்கின்றார். முழு உலகமும் இலங்கை ஆகும். அவர்கள் சாஸ்திரங்களில் எல்லைக்குட்பட்ட விசயங்களை எழுதி வைத்து விட்டனர். எல்லையற்ற தந்தை எல்லையற்ற விசயங்களைக் கூறுகின்றார். நாம் இப்பொழுது ஈஸ்வரனின் மடியில் இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். பிறகு நாம் புது உலகிற்கு எஜமானர்களாக, தேவி தேவதைகளாக ஆவோம். அங்கு மாயை இருக்காது. சூரிய வம்சத்தினர், சந்திர வம்சத்தினர் மிகவும் செல்வந்தர்களாக இருப்பர். பிறகு எப்பொழுது வைஷ்ய வம்சத் தினர்களாக ஆகின்றார்களோ, அப்பொழுது தங்க வைரங்களினால் கோயில் கட்டுகின்றனர். முதன் முதலில் யார் தங்க, வைரத்தினால் கோயில் கட்டினாரோ அவர்கள் அப்படிப்பட்ட மாளிகையில் இருந்தனர். அதனால் தான் பாரதம் தங்கம் போன்று இருந்தது என்று கூறப் படுகிறது. இப்பொழுது சோழி போன்று இருக்கிறது. இது பதீத உலகமாகும். பாரதம் தான் சத்திய கண்டமாக, பாவனமாக இருந்தது. பாரதம் தான் இப்பொழுது பதீத கண்டமாக இருக்கிறது. நாம் இப்பொழுது பாரதம் பாவன கண்டம் என்று கூற முடியாது. இப்பொழுது நாம் பாவனம் ஆகிக் கொண்டிருக்கிறோம். அது சம்பூர்ண நிர்விகாரி உலகமாகும். கிருஷ்ணருக்கு எவ்வளவு உயர்ந்த மரியாதை இருக்கிறது! அவரை ஊஞ்சலில் ஆட்டி விடு கின்றனர். ஆனால் அவரது சரித்திரத்தை அறியவில்லை.

இப்பொழுது கலியுகம் என்பதை நீங்கள் அறிவீர்கள். பாரதம் தான் சத்யுகமாக இருந்தது. உண்மையில் பாரதவாசிகள் தான் 84 பிறவிகள் எடுக்க முடியும். நீங்கள் நல்ல முறையில் புரிய வைக்கின்ற பொழுது ஏற்றுக் கொள்வர். இந்த ஈஸ்வரனின் மடியில் வருவதன் மூலம் பாரதம் தங்கம் போன்று ஆகிவிடுகிறது. அரசர் எவ்வழியோ மக்கள் அவ்வழியாக இருப்பர். பிரஜைகளையும் தங்கம் போன்று இருப்பர் என்று தான் கூறலாம். இப்பொழுது இராஜா, இராணி மற்றும் பிரஜைகள் சோழி போன்று இருக்கின்றனர். இப்பொழுது வைரம் போன்று ஆக்கக் கூடிய தந்தை வந்திருக்கின்றார் எனில், முயற்சி செய்ய வேண்டும். வைரம் போன்று ஆக்கக் கூடிய தந்தையோடு முழு யோகா செய்ய வேண்டும். சிவபாபாவிடமிருந்து நாம் வைகுண்டத் திற்கு எஜமானர்களாக ஆகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். முழு ஆதாரமும் படிப்பில் தான் இருக்கிறது. படிப்பைப் பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும் அல்லவா! வீட்டில் காரியங்கள் செய்தாலும் நான் இறை தந்தையின் மாணவன் என்று நினைக்க வேண்டும். நமது படிப்பு முற்றிலும் எளிதானது ஆகும். ஒரு மணி நேரமாவது கண்டிப்பாக வந்து கேட்க வேண்டும். நல்ல நல்ல கருத்துக்கள் வெளிப்படுகின்றன, அவைகள் திடீரென்று யாருக்காவது அம்பு போன்று பதிந்து

விடும். ஆகையால் எப்படியாவது முரளி அவசியம் கேட்க வேண்டும். கேட்க முடியவில்லையெனில், ஏதாவது முறையில் படிக்க வேண்டும். ஏற்பாடு செய்ய முடியும். முதலில் ஒரு வாரமாவது நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு புதுப்புது கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு அவசியம் படிக்க வேண்டும். பாபா கற்பித்துக் கொண்டே இருக்கின்றார். கருத்துக்கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தகவல் பலகையிலும் சகோதர சகோதரிகளே! வாருங்கள், உங்கள் அனைவருக்கும் இந்த எளிய ஞானம் மற்றும் எளிய இராஜயோகத்தின் மூலம் வைரம் போன்று ஆக்குவோம் என்று எழுத வேண்டும். உங்களிடம் அனைத்துச் சித்திரங்களும் உள்ளன. அதன் மூலம் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். எவ்வாறு சிறிய குழந்தைகளுக்கு பொம்மைகளைக் காண்பித்துக் கூறுவது, கற்பிப்பது போன்று - இது யானை, இவ்வாறு செய்யும், இது ஒட்டகம்..... மனிதர்களுக்கும் பரமாத்மாவைப் பற்றி தெரியாது, அவர் என்ன செய்கிறார்? என்பதையும் அறியவில்லை. அவரது செயல்களை அறிந்திருக்கவில்லையெனில், பிறகு என்ன மகத்துவம் இருக்கிறது? ஆக சித்திரத் தின் மூலம் புரிய வைக்க வேண்டும் - இவர் பரம்பிதா பரமாத்மா சிவன் ஆவார், இவர் வைரம் போன்று ஆக்கக் கூடியவர், இவரது ஆஸ்தி பிரம்மாவின் மூலம் கிடைக்கிறது. பிரம்மா குமார், குமாரிகளை சிவபாபா கற்பித்து இவ்வாறு தேவி தேவதை களாக ஆக்குகின்றார். கற்பித்திருப் பதால் தான் நாம் புரிய வைக்க முடிகிறது அல்லவா! பரமாத்மா வந்து கற்பிக்கின்றார் என்று முன்பு அறியாமல் இருந்தோம். பாரதம் வைரம் போன்று இருந்தது, இப்பொழுது சோழி போன்று இருக்கிறது என்பதை புரிய வைப்பது மிகவும் எளிதாகும். பிறகு சோழியின் பின்னால் சென்று ஏன் ஏமாற்றம் அடைகிறீர்கள்? இந்த செல்வம், சொத்து போன்ற அனைத்தும் மண்ணோடு மண்ணாகி விடும். இப்பொழுது நீங்கள் சத்திய கண்டத்திற்காக சத்திய வருமானம் செய்யுங்கள். முழு வருமானம் செய்யாத காரணத்தினால் முற்றிலும் சாதாரண பிரஜையாக ஆகிவிடு கிறீர்கள். பிரஜைகளுக்கும் வேலைக்காரர்களாக ஆகிவிடுகிறீர்கள். தந்தையினுடையவராகி பிறகு தந்தையை விட்டு விடுகின்றனர். ஆக பாபா புரிய வைக்கின்றார் - குழந்தைகளே! வீட்டிலும் முரளி வர வழைத்துப் படிக்க முடியும். முரளி கிடைத்துக் கொண்டே இருக்கும். எங்கிருந்தாலும் நீங்கள் அவசியம் படிக்க வேண்டும். படியுங்கள் மற்றும் கற்பியுங்கள். அயல்நாட்டில் இருந்தாலும் நீங்கள் சேவை செய்ய முடியும். தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். கடைசியில் தான் பிரபாவம் ஏற்படும். பழமையான பாரதம் சொர்க்கமாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்வர். எவ்வளவு செல்வங்களை கொள்ளையடித்துச் சென்று விட்டனர்!

சத்யுகத்தில் சைத்தன்யமாக நீங்கள் முழு உலகிற்கும் எஜமானர்களாக ஆகிறீர்கள், அதாவது இராஜ்யம் செய்கிறீர்கள். பிறகு பக்திமார்க்கத்தில் ஜட சிலைகளை ஒரு அறையில் வைத்து மூடி விடுகிறீர்கள், நினைவுச் சின்னம் உருவாக்குகிறீர்கள். பூஜைக்கான சாமான் களும் தேவை அல்லவா! இப்பொழுது நீங்கள் அனைத்தையும் அறிந்து விட்டீர்கள், நாம் அனைவரும் பூஜைக்குரியவர்களாக இருந்தோம், இப்பொழுது பூஜாரிகளாக ஆகிவிட்டோம். பூஜ்ய நிலை யிலிருந்து பூஜாரி ஆவதற்கு நமக்கு எவ்வளவு காலம் ஆகிறது? கோயில்கள் எப்படி உருவாகும்? நாம் தான் கோயில்கள் கட்டுவோம் அல்லவா! நாம் நமது ஜடச் சிலைகளை உருவாக்கி நமது பூஜையை ஆரம்பித்தோம். எவ்வளவு ஆச்சரியமான விசயம்! தந்தை புரிய வைக்கின்றார் - குழந்தைகளே!

இப்பொழுது எந்த தவறுகளும் செய்யாதீர்கள். ஆத்ம அபிமானி ஆவதன் மூலம் தான் நீங்கள் வைரம் போன்று ஆவீர்கள். தேக அபிமானத்தில் வரக்கூடாது. தேக அபிமானத்தில் வந்து பெரிய பெரிய பிரச்சனைகளை உருவாக்கினால் தன்னையும் அழித்துக் கொள்வீர்கள், மற்றவர்களையும் அழித்து விடுகிறீர் கள். ஒரே ஒரு ஞானக் கடலிடமிருந்து படித்து சிலர் மயில் சிம்மாசனத்தில் அமர்கின்றனர், சிலர் வேலைக்காரர்களாக ஆகின்றனர். பாருங்கள், இலட்சுமி நாராயணன் சொர்கத்தின் சக்கரவர்த்திகளாக இருந்தனர்! அவர்களுக்கு எவ்வளவு மகிமை இருக்கிறது, பூஜைகள் நடைபெறுகின்றன, கோயில்கள் கட்டுகின்றனர்! நாம் மீண்டும் சூரியவம்சி இலட்சுமி நாராயணன் ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிவீர்கள். பிறகு சூரியவம்சத்திலிருந்து சந்திரவம்சத்திற்கு வருவோம். இராஜ்யம் அடைவது எவ்வளவு உயர்ந்த பதவியாகும்! அப்படிப்பட்ட முயற்சி செய்ய வேண்டும் மற்றும் செய்விக்க வேண்டும். ஒருவேளை செய்விப்பதற்கு வரவில்லை யெனில் முயற்சி செய்யவே கற்றுக் கொள்ளவில்லை என்பதாகும். தனக்குச் சமமாக ஆக்க முடியவில்லை எனில் இராஜா இராணியாக ஆக முடியாது. அழிவற்ற ஞான இரத்தினங்களை தானம் செய்ய வேண்டும். இந்த போதை மிகச் சிலருக்கே இருக்கிறது. ஆத்ம அபிமானியாகி இருப்பதனால் குஷி அதிகரிக்கும். மம்மா, பாபாவைப் பாருங்கள் எவ்வளவு சிந்தனைகள் இருக்கின்றன! இந்தக் குழந்தை அடி வாங்குகிறது எனில் எப்படிக் காப்பாற்றுவது? என்ற கருணை தந்தைக்கு ஏற்படுகிறது. அடைக்கலம் கொடுப்பதில் எவ்வளவு பிரச்சனைகள் ஏற்படு கின்றன! சர்வசக்திவான் சிவபாபாவின் மூலம் பாரதத்திற்கு வைரம் போன்று ஆகக் கூடிய லாட்டரி கிடைக்கிறது. இங்கு நீங்கள் எதிரில் கேட்கிறீர்கள், நன்றாகத் தோன்றுகிறது. பாபா டோஸ் அதிகரித்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகள் ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) சுகம் கொடுக்கும் தந்தை, ஆசிரியர், சத்குருவிற்கு அவசியம் மரியாதை செலுத்த வேண்டும். அவரது வழிப்படி நடப்பது தான் அவருக்கு மரியாதை செலுத்துவதாகும்.

2) வீட்டுக் காரியங்கள் செய்தாலும் தன்னை இறை தந்தையின் மாணவன் என்று புரிந்து கொள்ள வேண்டும். படிப்பில் முழு கவனம் கொடுக்க வேண்டும். முரளி தவற விடக் கூடாது. சத்திய கண்டத்திற்காக சத்திய வருமானம் செய்ய வேண்டும்.

வரதானம் : கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அறிந்து மாயாஜீத் ஆகக் கூடிய மாஸ்டர் திரிகாலதர்சி ஆகுக.

எந்த குழந்தைகள் மூன்று காலங்களையும் அறிவார்களோ, அவர்கள் ஒருபோதும் மாயாவிடம் தோல்வியடைய முடியாது. ஏனெனில் நிகழ்காலம் எப்படி இருக்கிறது? மற்றும் எதிர்காலத்தில் என்ன நடக்க இருக்கிறது? இரண்டும் திரிகாலதர்சி ஆத்மாவின் புத்தியில்

தெளிவாக இருக் கிறது. எப்படி இருந்தேன்? என்ன ஆகப் போகிறேன்? நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்று இரண்டின் போதையும் அவர்களுக்கு இருக்கும். அந்த போதை யின் குஷியின் மூலம் அவர்கள் பறந்து கொண்டே இருப்பார்கள். ஆகையால் அவர்களது பாதம் பூமியி-ருந்து விலகி மேலே இருக்கும். அவர்கள் தேகம், தேக சம்பந்தம், தேகத்தின் பழைய பொருட்களின் ஈர்ப்பில் வர மாட்டார்கள்.

சுலோகன்: யாரிடம் சரள குணம் இருக்கிறதோ, அவர்களுக்கு குழுவுடன் சேர்ந்திருப்பது மிக எளிதாக இருக்கும்